
பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை
அஹமதி - குவைத்
செய்தி மலர்
அக்டோபர்
2025
தேவன்
ஒருவரையும்
புறக்கணியார்.
யோபு 36:5
இதழ் : 05
மலர் : 26

# முதன்மை ஊழியரிடமிருந்து...

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். எல்லா ஆராதனைகளிலும் ஜெபக்கூடுகைகளிலும் சபையின் குடும்பங்கள் எல்லோரும் கலந்து கொள்ளவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேவனுக்கு பிரியமானவர்களே! இந்த மாதமானது நமக்கு **கர்த்தரால் உண்டாகும் ஜெயத்தின் மாதமாக இருக்கும்.** யார் யாரெல்லாம் எதிரிகளால் கலக்கமுற்று பயந்து நிற்கிறீர்களோ... அது சத்துருவாக இருக்கலாம்: நோய், வியாதியாக இருக்கலாம்: கடன் பிரச்சனையாக இருக்கலாம்: ஒருவேளை வேலை ஸ்தலமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மோடு கர்த்தர் எப்பொழுதும் இருக்கிறார் என்பதை நாம் ஒரு நாளும் மறந்து விடக்கூடாது.

யூதா கோத்திரத்திற்கு விரோதமாக மூன்று ராஜாக்களும் அவர்களின் யுத்த சேனைகளும் திரளாய் வந்த பொழுது யூதா ஜனங்கள் எல்லோரும் கர்த்தரிடத்தில் சகாயம் தேடக் கூடினார்கள் என்று **(யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள்: யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்** -IIநாளா. 20:4) வேதம் கூறுகிறது. இவர்கள் கர்த்தரிடத்தில் சகாயம் தேடினபொழுது கர்த்தர் இவர்களுக்குச் சொன்ன பதில்... **“யூதா மனுஷரே எருசலேம் ஜனங்களே நீங்கள்**

தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" (IIநாளா. 20:17) என்று.

கர்த்தர் மேற்சொன்ன வசனத்தின்படி சும்மா (தரித்து) நில்லுங்கள் (நின்று) என்று சொல்லி இருந்தாலும்: யூதா ஜனங்கள் சும்மா இருக்கவில்லை. மாறாக அவர்கள் எல்லோரும் கர்த்தரை பாடித் துதி செய்யத் தொடங்கினபோது யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர்மலைத் தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரை கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள் (IIநாளா. 20:22).

எந்த சூழ்நிலையின் நிமித்தமும் பயந்து கலங்க தேவையில்லை. நாம் செய்ய வேண்டியது: கர்த்தரை கிட்டிச் சேரணும்: கர்த்தரை துதிக்கணும். வேதம் நமக்கு போதிக்கிறதும் அதுவே: "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15). அப்பொழுது யுத்தம் கர்த்தருடையதாக மாறும். கர்த்தரால் நமக்கு எப்பொழுதும் ஜெயம் உண்டாகும். கர்த்தர் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக. நம்மேல் கிருபையுள்ள தேவனுக்கே மகிமை உணடாவதாக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !**

**தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய் சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

## கிறிஸ்துவை மையமாய் கொண்ட குடும்பம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

வல்லமை மிக்க, நிகரற்ற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போவது என்னவென்றால்!

- கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மனிதன்
- கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பம்
- கிறிஸ்துவை மையமாகக் கொண்ட திருச்சபை

அன்பான கிறிஸ்தவர்களே! நாம் ஜெபிக்காத, கடவுளற்ற, கொள்கையில்லாத, துன்மார்கமான மக்களைப் பார்க்கிறோம். குழப்பங்கள் நிறைந்த, ஆவிக்குரிய வாழ்வில் பெலவீனமாக மக்கள் காணப்படுகிறார்கள். நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், திருச்சபைகளிலும் மற்றும் சமுதாயத்திலும் ஒரு திருப்புமுனை தேவைப்படுகிறது.

**அப்போஸ்தலருடைய நடபடிகள் அதிகாரம் 10 -ன் படி, நான் கொர்நேலியு வின் வாழ்வை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறேன்.**

### 1) கொர்நேலியுவும் அவனது குடும்பமும் :

கொர்நேலியு தன்னுடைய குடும்பத்தாரோடு தேவனுக்கு பயந்து பக்தியாய் வாழ்ந்தான். சிசோரா பட்டணத்தில் ரோம ராணுவத்தில் நூற்றுக்கு அதிபதியாய் வாழ்ந்து வந்தான். தினந்தோறும் ஜெபித்து, தேவையுள்ளவர்களுக்கு தாராளமாய் உதவி வந்தான். தரிசனத்தில் தேவதூதன் அவனிடத்தில் தோன்றி அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் சுவிசேஷத்தை சொல்லும்படி பேதுருவை அழைத்து வரும்படி சொன்னான். கொர்நேலியு கீழ்ப்படிந்து இரண்டு வேலைக்காரர்களையும் பக்தியுள்ள ஒரு இராணுவ சிப்பாயையும் பேதுருவினிடத்திற்கு அனுப்பினான்.

### 2) கோர்நேலியுவும் பேதுருவும் :

பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்தபோது கொர்நேலியு மரியாதையுடன் பேதுருவின் பாதங்களை பணிந்து கொண்டான். ஆயினும், பேதுரு கொர்நேலியுவை எழுப்பி சொன்னதாவது "எழுந்திரு நானும் ஒரு மனிதன் தான்". தான் முன்பு புறஜாதியாரோடு சேர்வதில் தயக்கம் காட்டினதாகவும், ஆனால் தேவன் ஒரு தரிசனத்தின் மூலமாக யாரையும் அசுத்தம் எனச்சொல்ல வேண்டாம் என்று பேதுருவுக்கு வெளிப்படுத்தியதாகவும், விவரித்துச் சொன்னான். கொர்நேலியுவும் தேவ தூதனோடு தன்னுடைய அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டான். பின்னர், பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினான்.

## 3) கொர்நேலியுவின் வீட்டில் பேதுருவும், ஜனங்களும் :

பேதுரு பிரசங்கித்த போது, பரிசுத்த ஆவி கொர்நேலியு மேலும் அவன் குடும்பத்தார் மேலும் நெருங்கிய நண்பர்கள் மேலும் இறங்கிற்று. அவர்கள் அந்நிய பாஷையில் பேசத் தொடங்கினார்கள் பேதுருவோடு வந்திருந்த யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு தேவனுடைய நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்தானம் பெற வேண்டும் என்று கட்டளை இட்டான். இப்படியாக, முதன் முதலில் புற ஜாதிகள் சுவிசேஷத்தையும், பரிசுத்த ஆவியையும் பெற்றார்கள். இச்சம்பவம், தேவன் அவருக்குப் பயந்து சரியாய் நடக்கிற எல்லா தேசத்து மக்களையும் ஏற்றுக் கொள்கிறார் என்பதைக் காட்டுகிறது.

கொர்நேலியுவின் தனி ஜெபம் குடும்ப ஜெபமாய் மாறியது. குடும்ப ஜெபம் ஒரு குடும்ப கூடுகையாய் மாறியது. குடும்ப கூடுகை அந்த வீட்டை தேவாலயமாய் மாற்றியது.

கோர்நேலியு ஜெபித்த போது முதலாவது, தேவ தூதன் பரலோகத்திலிருந்த ஒரு செய்தியோடு அவன் வீட்டிற்கு வந்தான்.

இரண்டாவதாக, தேவ வழி நடத்தலோடு பேதுரு யோப்பா பட்டணத்திலிருந்து தேவ செய்தியோடு அவன் வீட்டிற்கு வந்தான். மூன்றாவதாக, பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவி அந்த வீட்டிற்குள் வந்தது. இது பரலோகமே அந்த வீட்டிற்கு வந்த அனுபவமாய் இருந்தது.

இந்த நாட்களில், கொர்நேலியுவைப் போன்றவர்கள் தங்கள் ஜெப வாழ்வையும் குடும்ப ஜெபத்தையும் பேணிக் காக்கும் போது சுகாதாரமான கிறிஸ்தவ குடும்பங்கள், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ சமுதாயம் காணப்படும்.

தேவனுடைய வருகைக்கு முன் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பங்களும் திருச்சபைகளும் உலகெங்கும் காணப்படும். தேவன் தாமே இவ்வார்த்தைகளையும் உங்களையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் ஊழியத்தில் அன்புடன்
போதகர் . ஜாய் ஜாண் சாமுவேல்
எபிநேசர் ஊழியங்கள் – பெங்களூர்.

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

**திங்கட்கிழமை**
சகோதரிகள் ஜெபம்
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

# இல்லாதவைகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

## இல்லாத சந்ததி :

**இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான். (ரோமர் 4:17)**

நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாமைக் குறித்து இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய விசுவாசமானது தேவனாகிய கர்த்தர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன் என்பதாகும். அது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். சாதாரண ஜனங்களால் அதை நம்பவும் முடியாது ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஆனால் விசுவாசிக்கிறவர்கள் அதை அறிவார்கள்.

ஆபிரகாம் கர்த்தர் மேல் விசுவாசமாயிருந்தார். அவருடைய சரீரம் செத்து போயிருந்தது. அங்கே ஜீவனில்லை. அவருடைய மனைவியாகிய சாராளின் கர்ப்பம் செத்துப் போயிருந்தது. அங்கே குழந்தை உருவாக எந்த வாய்ப்பும் இல்லை. வயது முதிர்ந்து போனது. குழந்தை பிறக்க கூடுமானால் இதற்கு முன்பாகவே கிடைத்திருக்க வேண்டும். அதாவது ஆண்டவர் அபிரகாமை அழைக்கும் போது அவருக்கு 75 வயது சாராளுக்கு 65 வயது. உலகபிரகாரமாக எந்த வாய்ப்பும் இல்லை.

ஆனால் ஆபிரகாமின் விசுவாச அறிக்கை அவர் இல்லாத அதாவது செத்துப் போன சரீரத்திலிருந்து ஜீவனுள்ள சந்ததியை உண்டாக்குகிற தேவன். அந்த சந்ததியை கடற்கரை மணலைப் போலவும் வானத்து நட்சத்திரங்களைப் போலவும் பெருகப் பண்ணுகிற தேவன். கர்த்தர் ஆபிரகாமின் விசுவாசத்தை கனம் பண்ணினார். ஆபிரகாம் விசுவாசித்த படியே ஈசாக்கு பிறந்தார். அவருடைய சந்ததியான இஸ்ரவேல் ஜனங்கள் அதற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். இந்த கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் முடியாதவைகளை முடியவைக்கிற தேவன். நம் தேவன் வெறுமையிலிருந்து சகலவற்றை சிருஷ்டித்த தேவன். அவர் நமக்கு அற்புதம் செய்வார்.

## இல்லாத ஆட்டுக்குட்டி:

**அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி என் தகப்பனே என்றான். அதற்கு அவன் இதோ நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகன பலிக்கு ஆட்டுக் குட்டி எங்கே என்றான். (ஆதி :22:7)**

ஆபிரகாம் தன் ஏக சுதனாகிய புத்திரனை பலி செலுத்தும்படியாக மோரியா மலைக்கு அழைத்துச் சென்ற போது அதை ஈசாக்கோ அல்லது அவனோடு கூட சென்ற வேலைக்காரர்களோ கொஞ்சமும் அறியவில்லை. ஆயினும் ஈசாக்கின் உள்ளத்திலே ஒரு பெரிய கேள்வி கர்த்தருக்கு பலி

செலுத்தும்படியாக மோரியா மலைக்குப் போகிறோம். ஆனால் தகப்பனாகிய ஆபிரகாம் பலிக்கான எந்த மிருகத்தையும் எடுத்துக் கொண்டு வரவில்லையே என்று.

செல்வ சீமானமகிய ஆபிரகாம் ஒரு ஆட்டுக்குட்டி என்ன? நூறு ஆடுகளை கொண்டு சென்றிருக்கலாம. ஏன் ஆட்டுக் குட்டியை கொண்டு வரவில்லை? ஆடோ மாடோ வாங்கும் படியான சூழ்நிலை அந்த வனாந்தரமான பகுதியில் இருக்கப் போவதுமில்லை என்று குழம்பியிருந்த ஈசாக்குக்கு தகப்பனாகிய ஆபிரகாம் கொடுத்த பதில் **தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் (ஆதி:22-8)** ஆம் அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன்.

மோரியா மலை வந்ததும் ஈசாக்கை கட்டி பலிபீடத்தில் ஆபிரகாம் கிடத்தியதும் ஈசாக்குக்கு அதிர்ச்சியாயிருந்திருக்கக் கூடும். ஐயோ! நான் தானா அந்த ஆட்டுக்குட்டி என்னை மிகவும் அன்பாய் வளர்த்த தகப்பன் என்னை நோக்கி கத்தியை உயர்த்துகிறாரே என்று. அப்பொழுது ஒன்றுமே இல்லாதிருந்த இடத்தில் ஒரு ஆட்டுக்குட்டியை தேவன் காண்பிக்கிறார். எனவே அந்த இடத்தில் ஆட்டுக்குட்டியை பலியிட்டு சந்தோஷமாய் திரும்பி வருகிறார்கள்.

ஆம் நம்முடைய வாழ்க்கையிலும் ஒன்றுமே இல்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில் தேவன் சங்138:8-ல் சொன்னது போல கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார். மேலும் நம்முடைய குறைவுகளை பிலிப்பியர் 4:9 -ல் சொல்லப்பட்டுள்ளது போல தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

தேவன் தாமே நம்மை இந்த வார்த்தைகளைக் கொண்டு ஆசிர்வதிப்பாராக.

ஆமென்....

# வாலிபர் பகுதி

## கர்த்தர் தேடும் மனிதன்

**எசேக்கியேல் 22:30 நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன் ஒருவனையும் காணேன்.** தேவன் எங்கு எல்லாம் தேடுகிறார் என்றால்!

1) தீர்க்கதரிசிகள் நடுவில் தேடுகிறார்.

**எசேக்கியேல் 22:25** ஆத்துமாக்களை பட்சிகிறார்கள்

**எசேக்கியேல் 22:8 கர்த்தர் உரைக்காதிருந்தும், கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லி, அவர்களுக்குச் சாரமற்ற சாந்தை பூசுகிறார்கள்.**

2) ஆசாரியர்கள் நடுவில் தேடுகிறார்

**எசேக்கியேல் 22:26** வேதத்திற்கு விரோதமாக அநியாயஞ் செய்து பரிசுத்தத்தை பரிசுத்த குலைச்சல் ஆக்குகிறார்கள்.

3) பிரபுக்கள் மத்தியில் தேடுகிறார்

**எசேக்கியேல் 22:27** இரை கவ்வுகிற ஓநாய்களைப் போல அநியாயமாய் பொருளை வாங்கி ஆத்துமாக்களைக் கொள்ளையிடுகிறார்கள்.

4) ஜனங்கள் மத்தியில் தேடுகிறார்

**எசேக்கியேல் 22:29** ஜனங்கள் இடுக்கண் செய்து சிறுமையும் எளிமையுமா-னவனை ஒடுக்கி அந்நியனை அநியாயமாய்த் துன்பப்படுத்துகிறார்கள்.

ஜனங்கள் மத்தியில் தேடுகிறார் ஒருவனும் இல்லை தேவனுக்கு கிடைத்தது ஏமாற்றம் மட்டுமே. அப்படி என்றால் தேவன் தேடும் மனிதன் எப்படி பட்டவனாக இருக்க வேண்டும். **1பேதுரு 2:21 நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்** என்று வேதம் சொல்கிறது.

**எபிரெயர் 3:1 நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பாருங்கள்.**

இயேசுகிறிஸ்து மனிதன் என்று சொல்லப்பட்ட இடங்களை நாம் பார்போம் என்றால் தேவன் தேடும் மனிதன் எப்படி பட்டவனாக இருக்க வேண்டுமென்று அறிந்து கொள்ளலாம்.

1) முதலாவது

**பிலிப்பியர் 2:6-8** தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். முதலாவது தாழ்மை உள்ளவனாக இருக்க வேண்டும்.

தாழ்மை – சுயம் செத்தவனாக இருக்க வேண்டும்.

**கலாத்தியர் 2 :20** கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

**வெளி 3:1** நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். என் கிரியை இல்லை. நமக்கு லாபமாக இருப்பவைகளை நஷ்டமாக மாற்ற வேண்டும்.

2) இரண்டாவது

**யோவான் 19:5** இயேசு முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி இதோ இந்த மனுஷன் என்றான். பாடுகளை பிரச்சனைகளை சந்திக்கின்ற விதம்.

**ஏசாயா 53:7** அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

நமக்கு பாடுகள் சோதனை வரும்போது அதனை தைரியமாக சந்திக்க வேண்டும். நமக்கு முன்னே கர்த்தர் செல்வார் அதனை விட்டு புறாக்களை போல புலம்ப கூடாது **ஏசாயா 38:14**

**யோவான் 18:5** – அவருக்கு அவர்கள் பிரதியுத்திரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான் தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனே கூட நின்றான். இயேசு பாடுகளை தைரியமாக சந்தித்தார்.

3) முன்றாவது

**அப்போ 2:22** – நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். Jesus of Nazareth a man approved of GOD among you by miracles and wonders and signs.

கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவனாக இருக்க வேண்டும்.

**ஏசாயா 8:18** – நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.

எல்லாரும் ஊழியம் செய்கிறார்கள் நானும் செய்கிறேன் என்று அல்ல.

கிறிஸ்தவத்தில் copy என்பது இல்லை எல்லோரும் original தான்.

ஒவ்வொரு நாளும் புது கிருபையை தானே ஆண்டவர் தருகிறார்.

Copy ஏன் பண்ண வேண்டும் இன்னொருவரைப் பார்த்து நாம் ஏன் பண்ண வேண்டும். தாவீது கோலியாதை வீழ்த்துவதற்கு கவன் கல்லை பயன்படுத்தினான். ஆனால் பிற்பாடு அதை பயன்படுத்தியதாக வேதத்தில் இல்லை.

4) நான்காவது

**அப்போ 13:38** இவர் மூலமாய் உங்களுக்கு பாவ மன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது. That through this man is preached unto you the forgiveness of sins.

மனிதனை தேவனிடத்தில் ஒருவன் ஒப்புரவாக்க வேண்டும் என்றால் அந்த மனிதன் சரியானவனாக இருக்க வேண்டும்.

பவுல் _ பாவம் அறியாதவர் _ **2 கொரி 5 : 21** ல் வாசிக்கிறோம்.

யோவான் _ பாவம் இல்லாதவர் _ **யோவா 8:46** ல் வாசிக்கிறோம்;

பேதுரு _ பாவம் செய்யாதவர் _ **1 பேதுரு 2:22** ல் வாசிக்கிறோம்;

**தொடர்ச்சி 12-ம் பக்கம்**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
( ஆதி -12:2 ) "

செல்வன் . ஜோசப் அருள் தர்மர்

செல்வன் . நத்தனியேல் நக்கீரன்

செல்வி . ஷாலோம் கிரேஸ் அமோஸ்

சகோ . ஜெய்சன் ஆல்பாஸ் ஜேம்ஸ்

சகோ . சுஜீன் ஹெக்கல்

செல்வன் . சாலமோன் இம்மானுவேல்

சகோதரி . ஜீவரத்தினம் மகேஷ் ராஜ்

சகோ . ஸ்டாலின் சுனில் வின்ஸ்

செல்வன் . ஜீவன் அஸ்வா

செல்வன் . ஜோசுவா வேலு ராமர்

சகோ . வர்க்கீஸ்

செல்வி . ரியா பிரித்தி ஸ்டீபன்

செல்வன் . ஆதித் சிங் சுபின் சிங்

செல்வன் . லீட்டா ஹரன் ராஜகுமார்

செல்வி . லெனிஷா வர்க்கீஸ்

செல்வன் . ஹனிஷ் தினேஷ் குமார்

செல்வி . பிரியங்கா சதிஷ் குமார்

சகோ . மார்க் ஆண்டனி

சகோ . சாந்தி கண்ணன்

சகோதரி . அனிஷா ஆல்வின்

செல்வன் . ரோஷன் அசோக் குமார்

செல்வி . அரோலினா விஜயன்

செல்வன் . கேப்ரியல் எரேமியா

செல்வி. ரியானா பென்சிகா ராஜன்

சகோதரி . ஜெபராணி விபின்

செல்வன் . எல்பின் கட்சில் ஜெயகுமார்

சகோதரி . மரகதம் ஸ்டீபன்

சகோதரி . பியூலா மெர்சி ஜெகநாதன்




## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



திரு & திருமதி – குமாரசாமி & லீலா
திரு & திருமதி – விபின் & ஜெபராணி
திரு & திருமதி – ஜாண் ஹஸ்டன் & ஜெனிஷா
திரு & திருமதி – செங்குட்டுவன் & பிரிசில்லா
திரு & திருமதி – ராஜகுமார் & பானு ராதாமணி



'ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள் ' – 1கொரிந்தியர் 10:31

பிறந்த நாள் மற்றும் திருமண நாளை கொண்டாடுகிற அனைவருக்கும் சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துகள்

# அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/10/2025 | சகோ . ரவி ஜாண் பீட்டர் | சகோ . ஸ்டாலின் |
| 10/10/2025 | சகோ . பிரசாத் | சகோ . தாமஸ் |
| 17/10/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/10/2025 | சகோ . எபிநேசர்.V | சகோ . சீனிவாசன் |
| 31/10-25 | சகோ . வேலு ராமர் | சகோ . யேசுரத்தினம் |

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 5/10/2025 | சகோதரி . செலின் டேவிட் | சகோதரி . பிரிசில்லா ஆமோஸ் |
| 12/10/2025 | சகோ . பக்தராஜ் | சகோ . ஜாண்சன் |
| 19/10/2025 | சகோதரி . டெய்சி எபிநேசர் | சகோதரி . ஹெப்சி சாம் |
| 26/10/2025 | சகோ . கிரன்குமார் | சகோ . டேனியல் மனோஜ் |

**09/10/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**25/10/2025 சனிக்கிழமை – அன்று சகோதரிகள் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:30 வரை
வேத வினா பகுதி – கொலோசெயர்

**31/10/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:15 வரை
வேத வினா பகுதி – யோவான்

9-ம் பக்கம் தொடர்ச்சி

5) ஐந்தாவது

**அப்போ 17:31** – மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.

உயிர்த்தெழுந்த அனுபவம் வேண்டும்.

**ரோமர் 6:3 -5** புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும்.

**ரோமர் 1:5** – மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.

உயிர்தெழுந்த அனுபவம் நமக்குள் இருந்தால் நம்மை பார்ப்பவர்கள் நம்மை அறிந்து கொள்வார்கள். நம்மிடம் ஜீவனுள்ள தேவன் வாசம் செய்கிறார் என்று.

மகதலேனா மரியாள் - இயேசுவிவை தோட்டக்காரன் என்று எண்ணினாள்

எம்மாவூர் சீஷர் - இயேசுவை வழிப்போக்கன் என்று எண்ணினான்.

நம்முடைய ஆவி ஆத்துமா சரீத்தில் புதிதாக்கப்பட்ட அனுபவம் வேண்டும். கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக.

**– கிறிஸ்துவின் பணியில் ATC Youth Team –**
**Be an example : 1 Timothy 4 : 12**

## கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான என் அன்பு சகோதர சகோதரிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

**சங்கீதம் 34:10** ல் வாசிக்கும் போது... சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது; என்று வசனம் சொல்லுகிறது. எந்த சூழ்நிலைகளில் அவரை தேடுகிறோம் என்பதை கர்த்தர் அறிவார். பல பிரச்சனைகளின் மத்தியிலும் பலவீனங்களின் மத்தியிலும் போராட்டங்களின் மத்தியிலும் கவலையின் நேரத்திலும் அவரைத் தேடுகின்றோமா? எதுவாயிருந்தாலும் கர்த்தரை தேடிவரும்பொழுது. அவர் எல்லாவற்றையும் மாற்ற அவர் வல்லவராக இருக்கிறார்.

**சங்கீதம் 34 : 4** ல் வாசிக்கும் போது நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார். என் அன்பு தேவப் பிள்ளைகளே வசனம் மிகவும் தெளிவாக சொல்கின்றது தேவையில்லாத பயங்கள் நம்மை மிகவும் கவலையடையச்

செய்கிறது. அவரை தேடி வரும் போது நிச்சயமாக நம்முடைய பயங்கள் எல்லாம் காணாமல் போகும்.

**சங்கீதம் 40 : 16** ல் – வாசிக்கும் போது உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார் களாக இந்த வசனம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது.

**சங்கீதம் 53:2 / சங்கீதம் 14:2** ல் வாசிக்கும் போது தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார் என்று வாசிக்கிறோம். நம்முடைய ஒவ்வொரு அசைவுகளும் அவருக்கு தெரியும். சீஷர்கள் அவரோடே இருக்கும் போது அவர்கள் இருதயங்களில் சிந்திக்கிறதை அவர் உங்கள் இருதயங்களில் இப்படி சிந்திக்கிறதென்ன என்று அவர்களை பார்த்து கேட்டார். அப்படியென்றால் நம்முடைய உணர்வுகளையும் சிந்தனைகளையும் அறிந்திருக்கிறார். அவரைத் தேடுகிறவர்களுக்கும் அவரை தேடாதவர்களுக்கும் அவர் வித்தியாசத்தை காட்டுகின்ற கர்த்தர்.

**சங்கீதம் 145 : 18** – தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். ஜெபிப்பதில் கூட உண்மை இருக்க வேண்டும். ஏதோ கடமைக்காக ஜெபித்தோம் என்று சொன்னால் அந்த காரியம் எப்படி வாய்க்கும்? அவர் எப்போதும் நம் சமீபத்தில் இருக்கின்றார்.

**ஏசாயா 55:6** ல் வாசிக்கும் போது கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். நம் சபையில் அநேக ஜெப கூடுகைகள் நடக்கின்றது ஒவ்வொன்றிலும் தவறாமல் கலந்து கொண்டு அவரைத் தேடுவோம் காரியங்களை கர்த்தர் ஜெயமாக மாற்றித் தருவார்.

**மத்தேயு 6:33** ல் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். ஏதோ ஒரு ஆதாயத்திற்கு மாத்திரமல்ல ஆசீர்வாதத்திற்கு மாத்திர அல்ல எதையுமே எதிர்ப்பார்க்காமல் விசுவாசத்தோடு நீர் எனக்கு எதை செய்தாலும் அது நன்மைக்கே என்று எடுத்துக் கொள்வோம். அவரை நம்பி வந்தவர்கள் ஒரு நாளும் வெட்கப்பட்டு போனதில்லை.

**புலம்பல் 3:25** ல் வாசிக்கும் போது கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். பிரியமான என் அன்பு தேவப் பிள்ளைகளே தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். எல்லாவற்றையும் அவரிடத்தில் சொல்வோம் (அல்லது) அறிக்கையிடுவோம் அவர் பார்த்துக் கொள்வார். ஆகவே கர்த்தரை தேடிவருவோம். நாம் நடக்க வேண்டிய வழியை அவர் நமக்கு தெரியப்படுத்துவார். கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்..

இப்படிக்கு

சகோதரன். பக்தராஜ் ஜீவா

## அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை யோவேல், ஆமோஸ் ,ஒபதியா ,ஆகாய் புத்தகத்திலிருந்து வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்.**

1) எது மனுபுத்திரரை விட்டு ஒழிந்துபோயிற்று?
2) இரட்சிக்கப்படுவது யார்?
3) கர்த்தர் எங்கே வாசமாயிருக்கிறார்?
4) எந்த தேசத்தின் கர்ப்பஸ்திரீகளைக் கீறிப்போட்டார்கள்?
5) கேதுரு மரங்களைப் போல் உயரமும் கர்வாலி மரங்களைப் போல் வைரமுமாயிருந்துத யார்?
6) கர்த்தராகிய ஆண்டவர் யாருக்கு தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்?
7) கர்த்தர் எதைக் கொண்டு ஆணையிட்டார்?
8) எப்பொழுது நாம் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் நம்மோடே இருப்பார்?
9) யாக்கோபுடைய மேன்மையை வெறுத்து அவனுடைய அரமனைகளைப் பகைத்தது யார்?
10) எதினால் நியாயம் விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
11) அலறுதலாக மாறுவது எது? ______________________ கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று _________________ செல்லுகிறார்?
12) எது பாவமுள்ள ராஜ்ஜியத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது?
13) எப்பொழுது ராஜ்ஜியம் கர்த்தருடையதாய் இருக்கும்?
14) _______________ அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன் அதினால் ___________ என்று கர்த்தர் சொல்லுகிறார்?
15) கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் எதை அசையப்பண்ணுவேன் என்று யார் சொல்லுகிறார்?

**குறிப்பு - விடைகளை வருகின்ற 20-10-2025 க்குள் சபையின் செயலாளரிடமோ (66159784) அல்லது செய்திமலர் பொறுப்பாளரிடமோ (+917305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை யோவேல், ஆமோஸ், ஒபதியா, ஆகாய் புஸ்தகங்களிலிருந்து தேடி கண்டுபிடிக்கவும்.**

## செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடை
## சங்கீதப் புத்தகத்திலுள்ள 1 முதல் 50 அதிகாரத்திலுள்ள வசனங்களிலிருந்து

1. நித்திய காலமாகவும் தலைமுறை தலைமுறையாகவும் (சங்கீதம் 33:11 )
2. இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் (சங்கீதம் 5:6)
3. துன்மார்க்கன் (சங்கீதம் 37:21)
4. கர்த்தர் (சங்கீதம் 25:8)
5. நீதியை (சங்கீதம் 40:9)
6. யாக்கோபுக்கு (சங்கீதம் 44:4)
7. மண்குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக் கொப்பான சுத்த சொற்கள் (சங்கீதம் 12:6)
8. தாம் அபிஷேகம் பண்ணினவரை (சங்கீதம் 20:6)
9. சீயோனை கொத்தளங்களை (சங்கீதம் 48:12)
10. தேவன் (சங்கீதம் 50:6)
11. தாவீது (சங்கீதம் 43:1)
12. தாவீது (சங்கீதம் 25:15)
13. கீழ்க்காற்றினால் (சங்கீதம் 48:7)
14. பூமியில் பாழ்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை (சங்கீதம் 46 :8 )
15. வானங்கள் (சங்கீதம் 8 : 3)

## செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

1. சகோதரி . சுகந்தி
2. சகோதரி . வனிதா
3. சகோ . பக்தராஜ்
4. சகோதரி . பியூலா ஜெகன்நாதன்
5. சகோ . புஸ்பராஜ்
6. சகோதரி . பிரிசில்லா செங்குட்டுவன்
7. சகோதரி . மரிய குளோரி தாஸ்
8. சகோதரி . ஜான்சி ராணி
9. சகோதரி . ஜீனா சதீஷ்
10. சகோதரி . சாந்தி
11. சகோதரி . தயா யேசுரத்தினம்
12. சகோதரி . ஜாஸ்மின் மெர்சி
13. சகோதரி . பத்மினி
14. சகோதரி . விக்டோரியா ராஜன்
15. சகோ . அ. எட்வின் சாம்
16. சகோதரி . சுபா ஸ்டீபன்
17. சகோதரி . செலின் டேவிட்
18. சகோதரி . மரகதம் ஸ்டீபன்


## மகிமையின் மேகம்

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டி
நித்தியானந்தமுள்ள ஏக சக்ராதிபதி
ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா
இருக்கிறவரும் இருந்தவரும்
வருகிறவருமாகிய
சர்வ வல்லமையுள்ள கர்த்தர்.
ஒருவராய்...ஒருவராய் சாவாமையுள்ளவர்
சேரக் கூடாத ஒளியில் வாசம்
பண்ணுகிறவர்
மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர்
காணக் கூடாதவர்
கனமும் நித்திய வல்லமையும் உடையவர்
ஒரு மகிமையின் மேகம்...
வல்லமையுள்ள தூதரோடு இறங்கி
வருபவர்
ஆசரிப்புக் கூடாரத்தில் நிலை
கொண்டிருப்பவர்
அவர் ஒருவரே நல்லவர்
ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு
வானத்தில் இருந்து வெளிப்படுபவர்
உண்மையுள்ளவர்... என் ஆத்தும நேசர்
பரிசுத்தம்...பரிசுத்தம்...மகா பரிசுத்த
ஸ்தலம்
நீர் வாசம் செய்யும் இடம்
இன்பமானவர் வெண்மையும்
சிவப்புமானவர்
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
என் நேசர்... சாரோனின் ரோஜா
பள்ளதாக்கின் லீலிபுஷ்பம்...
முட்செடியில் உதித்தவர்
அக்கினியாய் பேசியவர்
மகிமையின் மேகமாய் சீனாய் மலையில்
தங்கி இருந்தவர்
ஆயிரம் தலைமுறைக்கு இரக்கத்தை
காப்பவர்
பசும் பொன்னினால் ஆன கிருபாசனத்தை
உடையவர்
பழுதற்ற ஆட்டுக்குட்டி... பழுதற்ற
ஆட்டுக்குட்டி
எனக்காக எனக்காக பலியான
ஆட்டுக்குட்டி
ஆனாலும் !!!
மேல் வீட்டு அறையினில்
பெந்தே கோஸ்தே நாளினில்
ஒரு மனப்பட்ட இடத்தில் இறங்கி வந்தீரே
பரலோகமே... பரலோகமே...
பரிசுத்த வான்களாகிய
அப்போஸ்தலர்களே
தீர்க்கதரிசிகளே அவர் வந்தார்
வந்து விட்டார்
ஒரு மகிமையின் மேகமாய்.

**கிறிஸ்துவுக்காக...**

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF SEPTEMBER

- Vincy Raani
- Hannah Menorrah
- Rheul
- Amish David
- Adriel
- Andrea
- Solomon
- Ritiksha
- Jarrel Jenika
- Paul Samuel
- Affia
- Joel
- Jerald
- Sifenshika
- Hanshika Sam
- Joshua
- Hanish
- Ryan Satheesh




# October Month Quiz for Children



(Write the answers using the King James Version)

Note:-All children should read the bible carefully and find the answers in the book of **Genesis chapter : 39- 50**. Submit your answers to the children bible school coordinator on or before 20/10/2025. Please mention the reference along with the answers.

1. Who was Joseph's master in Egypt?
2. Who were in prison with Joseph?
3. Who explained pharaoh's dream?
4. What job did pharaoh give Joseph?
5. Why did Joseph's brother go to Egypt?
6. What did Joseph hide in Benjamin's sack?
7. How many people of Jacob's family went to Egypt?
8. Where did pharaoh give Jacob's family land to live?
9. Who got the Greater blessing Ephraim or Manasseh?
10. What did Joseph say about his brother's selling him?

## Answers for the children's quiz – September month

1.He was old and his eyes were so dim that he could not see (Genesis 27 : 1)

2.Jacob put on Esau's clothes and goat skins on his neck so he would feel and smell like Esau. (Genesis 27 : 15-16)

3.A ladder set up on the earth reaching to heaven, with angels of GOD were ascending and descending on it. (Genesis 28 : 12)

4.Rachel (Genesis 30 : 3-4)

5.20 Years (Genesis 31 : 41)

6.Israel – because he had power with GOD and with men and prevailed (Genesis 32 :28)

7.Esau ran to meet him and embraced him and fell on his neck and kissed him and they wept (Genesis 33 : 4)

8.During child birth (Genesis 35 : 16-18)

9.The edomites (Genesis 36 : 1,9)

10.Wicked in the sight of the lord (Genesis 38 : 7)

# நேசரின் அன்பு

சாந்த சொரூபியே! அன்பே உருவானவரே!
உம் அன்பை நான் என்னவென்று
விவரிப்பேன்
வார்த்தைகளே இல்லாத எம் நேசரின்
அன்பை நான்
எப்படி புகழுவேன்? தேனிலும்
இனிமையான
தெவிட்டாத உம் வேத வசனங்களே எம்
உள்ளங்களைத் தேற்றுகின்றது –
நோயினால் துன்புறும்
பிணியாளிகளுக்கு சிறந்த மருத்துவர் நீர்
மட்டும் தானப்பா!
யேகோவாரப்பா – சுகம் தரும் தெய்வம்
நீரே என்
இராஜாதி ராஜா! திகைத்து நின்ற
வேளைகளில்
நீர் ஓடோடி வந்து எம் கண்களில்
வழிந்தோடும்
கண்ணீரைத் துடைப்பவர் நீர் ஒருவரே!
போலியான அன்பு காட்டும் இவ்வுலகில்
உம்
அன்பு ஒன்றே நிலையானது மாறாதது
எம்மை
பற்பல சூழ்நிலைகளில் உயர்த்தி அழகு
பார்ப்பதே உமது
சித்தமாகும் உம்மைத் தேடாமல்
இருப்பினும்
எம் கரங்களைப் பற்றிப் பிடித்து
கைவிடாமல் காத்து
வழிநடத்து பவரும் நீரே ஐயா! உம் பாசக்
கயிற்றினால்
எம்மை கட்டி அணைத்துக் காப்பவரும் நீர்
மாத்திரமே!
எம் இன்ப துன்ப வேளைகளிலே
உம்மையே நாங்கள்
சார்ந்து வாழ வைப்பவரே! ஆயிரம் நாவுகள்
இருந்தாலும்
உம்மைத் துதித்துப் புகழ்ந்து பாட
போதாதையா!
உம் பாதம் ஒன்றே எமக்கு வேண்டுமையா!
துரோகங்கள்
பல செய்து ஏமாற்றி வாழ்கின்ற
இவ்வுலகில் ஒரே ஒரு
வாழ்வினை உமக்கு மட்டுமே சேவை
செய்ய எம்மை
அர்ப்பணிக்கின்றோம் உம் அன்புக் கடலில்
மூழ்க எம்மை
என்றும் ஆசிர்வதிப்பீராக!

**(A. பியூலா மெர்ஸிபால்)**

என் இயேசு ராஜா என் இதயம் கேட்டிடுமே
என் நாவினில் உம் விரலால் சுரம் ஒன்று ஏற்றிடுமே
என் நாவாலே பிறர் உள்ளம் ஆற்றிடும் வகையின்று காட்டிடுமே
நாளெல்லாம் உம்மைப் போற்றுவேனே நாதரின் ஜனம் கேட்டிடுமே
ஆசீர்வாதத்தால் நிறைத்திடுமே என் நாவை
ஆறுதல் படுத்திடுமே உம் ஜனத்தை
ஆனந்தத்தால் நிறைத்திடுமே என் நாவை
அழுகையை மாற்றிடுமே இன்றே
உற்சாகத்தை ஊற்றிடுமே என் நாவில்
ஊக்கமாய் ஜெபிப்பேன் என்றுமே
விசுவாசம் ஏற்றிடுமே என் நாவில்
மன ஐயம் போக்கிடுமே பிறர் வாழ்வில்
ஆசியின் மேல் ஆசி பொழிந்திடுமே
அடியோர் இப்பாட்டை வாசிக்கையில்
ஆசிர்வாதம் பெற்றோர் போற்றுவாரே
இயேசுவை அவர் நாவால்......

**கிறிஸ்துவின் பணியில்**

# கடந்த மாத நிகழ்வுள் சில


















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்
# செயற்குழு உறுப்பினர்கள்

## முதன்மை ஊழியர்
Bro. ஆரோக்கியதாஸ்
Ph. 9987 0126

## செயலாளர்
Bro. ஆரோக்கியராஜ்
Ph.60918793

## பொருளாளர்
Bro. ஜாண்சன்
Ph.97610275

## பெண்கள் ஐக்கிய தலைவி
Sis. டெய்சி எபிநேசர்
Ph.60686612

## வாலிப ஐக்கிய தலைவர்
Bro. கிறிஸ்டோபர்
Ph.67096449

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

# JESUS
*Is my Savior*

**Church Postal Address**
**Your Name**
**PO.Box No: 46795,**
**Fahaheel, 64018,**
**Kuwait.**

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Private Circulation Only